# கந்தளாய் பிரதேச சபை

## திருகோணமலை மாவட்டம்.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டினதும் 2009 ஆம் ஆண்டினதும் நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 30 வரை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 வங்கிக் கணக்கிணக்கங்கள்

நிதிப் பிரமாணம் இல. 396 இன் பிரகாரம் ஒவ்வொரு மாத முடிவிலும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். சபையானது கணக்கு இல. 0004940252 இற்குரிய வங்கிக் கணக்கிணக்கக்கூற்றினை 2010 மே தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2010 திசெம்பர் 21 ஆந் திகதி வரையிலும் தயாரித்திருக்கவில்லை.

#### 1.2.2 தொங்கல் கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிச்சயமற்ற தன்மையிலான கணக்குகளின் வரவு மீதிகள் ரூபா 10,411,445 ஆக இருந்தது.

#### 1.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 1 வருடத்திற்கும் மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,816.916 ஆகும்.

### 1.2.4 முறையற்ற கொடுப்பனவுகள்

(i) மக்கள் வங்கியில் 090881 ஆம் இலக்க காசோலை மூலம் 2010 மார்ச் 22 ஆந் திகதி தலைவருக்கு ரூபா 511,868 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இக்கொடுப்பனவானது சபையின் எவ்வித கொடுப்பனவுகளுடனும் தொடர்பற்றிருந்ததுடன் ஏடுகளிலும் பதிவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2009 செப்தெம்பர் 08 ஆந் திகதி கணக்கு இல 090-5-01-300266-7 இலிருந்து ரூபா 4 மில்லியன் தொகை நிலையான வைப்பிலிருந்து சபையின் செயலாளரினால் மோசடியான முறையில் காசாக மாற்றப்பட்டிருந்தது. இதில் ரூபா ஒரு மில்லியன் மாத்திரம் சபைச் செயலாளரினால் மீளச் செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 3 மில்லியன் தொகையும் சபைச் செயலாளரிடமிருந்து அறவிடப்பட்டிருக்க வில்லை.

(iii) எரிபொருள் தாங்கியின் கொள்ளளவினை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட ரூபா 18,735 பெறுமதியான எரிபொருள் செலவினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வாகன இல. | தாங்கியின் கொள்ளளவு லீற்றர்கள் | திகதி | எரிபொருள் நிரம்பும் போது தாங்கியில் இருந்த லீற்றர்களின் எண்ணிக்கை | நிரப்பப்பட்ட லீற்றர்களின் எண்ணிக்கை | மேலதிக எரிபொருள் | ஒரு லீற்றர் எரிபொருளின் விலை | மொத்த மேலதிகக் கொடுப்பனவு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ரூபா | ரூபா |
| எல்எப்/7212 | 165 | 2010.03.02 | 16.3 | 213 | 64.3 | 73.50 | 4,726 |
| | | 2010.06.17 | 164.6 | 191 | 190.6 | 73.50 | 14,009 |
| | | | | | 254.9 | | 18,735 |

(iv) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 140,250 கிரயமான அலுவலக உபகரணங்களுக்குரிய பற்றுச் சீட்டுக்களுக்கு ரூபா 161,287 தொகை செலுத்தப்பட்டு தீர்க்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக தவறுதலாக ரூபா 21,037 தொகை மேலதிகமாக வழங்குனருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

**(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2010 யூன் 30 இல் உள்ளவாறு 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத அதேவேளை அக்கணக்காய்வு ஐயவினாக்களுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக் கூடிய பெறுமதி ரூபா 4,511,868 ஆகும்.

**1.2.6 விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

ஒரு வருடத்திற்கும் மேலாக வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 143,196 பெறுமதியான இருபது காசோலைகள் தொடர்பாக தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 வருமான நிர்வாகம்**

**2.1.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்**

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 2,670 | 819 | 1,851 | 5,917 | 641 | 5,276 |
| (ii) | வாடகைகள் | 4,760 | 1,448 | 3,312 | 4,312 | 341 | 3,971 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 398 | - | 398 | 371 | 371 | - |
| (iv) | வேறு வருமானங்கள் | 21,572 | - | 21,572 | 11,749 | 11,749 | - |

### 2.1.2 நீதிமன்ற தண்டப்பணங்கள்

பல்வேறு கட்டளைகளின் கீழ் கந்தளாய் நீதவான் நீதி மன்றத்தால் 2010 திசெம்பர் 31 வரை சேகரிக்கப்பட்டு பிரதம செயலாளர் / மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 8,865,317 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களைப் பெற சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. சபையினால் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப் பணங்களை கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.1.3 முத்திரைக் கட்டணங்கள்

மீளாய்வாண்டிற்காக பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்து கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 18,471 | 13,170 | 5,301 | 15,160 | 2,611 | 12,549 |
| ஏனையவை | 10,113 | 6,837 | 3,276 | 8,446 | 4,470 | 3,976 |
| உப மொத்தம் | 28,584 | 20,007 | 8,577 | 23,606 | 7,081 | 16,525 |
| மூலதனச் செலவினம் | 850 | 1,585 | (735) | 12,900 | 2,426 | 10,474 |
| முழு மொத்தம் | 29,434 | 21,592 | 7,842 | 36,506 | 9,507 | 26,999 |

## 2.3 மனித வள முகாமைத்துவம்

### 2.3.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | பற்றாக்குறை / மேலதிகம் |
|---|---|---|---|
| பதவிநிலைத் தரங்கள் | 03 | 02 | 01 |
| இரண்டாம் தரங்கள் | 25 | 17 | 08 |
| ஆரம்ப தரங்கள் | 29 | 23 | 06 |
| மொத்தம் | 57 | 42 | 15 |

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.4.1 பெறவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய உத்தியோகத்தர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,417,880 ஆன அதேவேளை 01 ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற மீதிகள் ரூபா 4,072,441 ஆகும்.

**2.5 வாகனப் பாவனை**

(i) சபைக்குச் சொந்தமான வாகனங்களின் சம்பவத்திரட்டுப் புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக செயற்படாதிருக்கும் சபையின் சில வாகனங்களின் மீற்றர் மாணியைத் திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) எவ்வித அங்கீகாரம் இன்றி எச்.எம்.ஐ உழவு இயந்திரம் ஒன்று ரூபா 25,000 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

**2.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனமொன்று பத்தரமுல்லயில் வைத்து பிரேக் செயலிழந்தமையினால் குருநாகல் யுனைடட் மோட்டர்ரஸ் கம்பனிக்கு பழுதுபார்த்தலுக்காக எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. வாகனத்தை குருநாகலைக்குக் கொண்டு செல்வதற்கான வாகனக் கூலியாக கம்பனிக்கு ரூபா 7,000 செலுத்தப்பட்டிருந்தது. கொழும்பில் பழுதுபார்த்தல் வசதிகள் பெறப்பட்டிருக்குமாயின் எவ்வித பிரயாணச் செலவுகளும் இன்றி வாகனத்தைப் பழுதுபார்த்திருக்க முடிந்திருக்கும் எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**2.7 உள்ளகக் கணக்காய்வு**

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு